/பதிவுத்துறை/

அனுப்புநர்

பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை – 28

பெறுநர்

அனைத்து
மாவட்டப்பதிவாளர் /
சார்பதிவாளர் /
துணை பதிவுத்துறைத்தலைவர்.

எண்.48534/ஐ4/2016, நாள் 27.12.2017

அய்யா,

பொருள்: சீட்டு நிதிச்சட்டம் - கட்டணத் திருத்தம் - 13.12.17 முதல் நடைமுறைப்படுத்திடக் கோரி - சுற்றறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசு கடித எண்.12843/G/13-3, நாள் 20.12.17.
2. தமிழ்நாடு அரசிதழ் எண்.50, நாள் 13.12.17.
3. இவ்வலுவலக கடித எண்.48534/ஐ4/16, நாள் 22.12.17.

*****

பார்வை 2ல் காணும் அரசிதழ் அறிவிப்பின்படி சீட்டு நிதிச் சட்டத்தின் கீழான கட்டண விகிதங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தம் 13.12.17 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் அரசிதழ் நகல் திருத்தப்பட்ட கட்டண விகிதத்தினை உடன் செயல்படுத்திட அறிவுறுத்தி பார்வை 3ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின் வழி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சீட்டு நிதிச்சட்டத்தின் கீழ் உதவிச்சீட்டுப் பதிவாளர்களான சார்பதிவாளர், துணைச்சீட்டுப்பதிவாளர்களான மாவட்டப்பதிவாளர் மற்றும் சீட்டு நடுவர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுக்கான கட்டண விகிதங்கள் 13.12.17 முதல் திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் புதிய கட்டண விகிதங்களை தவறாது கடைப்படித்திட அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இத்திருத்தம் 13.12.17 முதல் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் 13.12.17 முதல் பழைய கட்டண விகிதங்களில் கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்பட்டிருப்பின் புதிய கட்டண விகிதங்களின் அடிப்படையில் வித்தியாச கட்டணத் தொகையினை உரிய நபர்களிடமிருந்து வசூலிக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இப்பணியினை துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் தவறாது ஆய்வு செய்யவும், அறிவுறுத்தப்படுகிறது.

27/12/17

பதிவுத்துறைத்தலைவருக்காக

27/12/17

நகல்:

கணினிப்பிரிவு

(பதிவுத்துறை வலைதளத்தில்

பதிவேற்றம் செய்திட)